# SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

**Name :** **Date :**

**Grade :** **Worksheet** **Submission Date :**

**Subject : Tamil** **Parent's sign :**

## ஒன்றல்ல இரண்டல்ல

**அ ) பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

தென்றல் தரும் இனிய தேன்மண மும்கமழும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

பகைவென்ற திறம்பாடும் பரணி வகை - செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை - வான்
புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் - செம்
பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி....)

முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி - வான்
முகிலினும் புகழ்படைத்த உபகாரி - கவிச்
சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி - இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

- உடுமலை நாராயண கவி

**வினாக்கள்:**

1. ________________ மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தது.
2. “உபகாரி” என்பதன் பொருள் என்ன?
3. தமிழ் மன்னர்களும் வள்ளல்களும் ______________ யில் சிறந்தவர்கள்.
4. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் யார்?
5. இசைப்பாடல் நூலின் பெயரை எழுதுக.
6. வான்புகழ் கொண்ட நூல் எது?
7. முல்லைக்குத் தேர் தந்த வள்ளலின் பெயர் என்ன?
8. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்த வள்ளல் யார்?
9. இப்பாடலின் ஆசிரியர் யார்?
10. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

**ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து அப்படங்களுக்கு ஏற்ற வள்ளல்கள் யார் எனக் கண்டுபிடித்து பொருத்துக.**

1.  -- பாரி

2.  -- ஓரி

3.  -- ஆய் அண்டிரன்

4.  --- பேகன்

5.  -- அதியமான்

**இ) கூறியவாறு செய்க.**

1. ஒன்றிரண்டு அல்ல (பிரித்து எழுதுக)

2. எட்டுத்தொகை (பிரித்து எழுதுக)

3. நன்மை + செய் (சேர்த்து எழுதுக)

4. பகுத்து + அறிவு (சேர்த்து எழுதுக)